10th August 1965]

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் கவனத்தில் உள்ளது.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபிஸ்கள் ஏழெட்டு சர்க்கிள்களில் பல பகுதிகளில் அமைந்திருப்பதால் வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அதனுல் துன்பம் ஏற்படுவதால் உடனடியாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீஸ்களை சென்ட்ரல் இன்கம் டாக்ஸ் ஆபிசை அமைத்திருப்பதுபோல் ஒரே கட்டடத்தில் அமைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த நகரில் உள்ள பொதுவான நிலைக்கு விவரம் சொன்னேன். இந்தக் குறிப்பிட்ட கேள்விக்கு விவரம் வேண்டுமானுல் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள்

* 188 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் நமது மாநிலத்தில் வைசூரி (பெரியம்மை) நோயினுல் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(இ) எத்தனை பேர்களுக்கு தடுப்பு முறை கையாளப்பட்டது, மாவட்டவாரியாக ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பாதிக்கப்பட்டவர்கள் என்ற இடத்தில் கூறப்பட்டிருப்பது அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தமா ? அல்லது இறந்தவர்கள் என்று அர்த்தமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தம்.

Division of the State into two Health Zones

* 189 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to divide the State into two Health Zones for the purpose of transfer of staff in the offices of District Health Officers?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

---

[a] 710-ம் பக்கத்தில் IV-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.